Ontario Energy Board
Commission de l'énergie de l'Ontario

TAKE CHARGE

# தகவலறிந்த சக்தி நுகர்வோராக இருங்கள்

**நாங்கள் உதவலாம்**

உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்துக்கும் ஏற்ற தீர்மானங்களை எடுப்பதற்கு, தகவலறிந்தவராக இருப்பது உதவுகிறது.

OEB என்பது ஒரு சுயாதீனமான, பாரபட்சமற்ற பொது நிறுவனம் ஆகும். பொதுமக்களின் நலனுக்காக நாங்கள் முடிவெடுக்கின்றோம். ஒரு நியாயமான செலவில், நம்பகமான சக்திச் சேவைகளை உங்களுக்கு வழங்கும், பணரீதியாக சாத்தியமான, வினைத்திறனான சக்தித் துறையை ஊக்குவிப்பது எங்களுடைய நோக்கம் ஆகும்.

- எங்களுடைய செயல்முறைகள் வெளிப்படையானவையாகவும் பொதுமக்களின் ஈடுபாட்டை வரவேற்பவையாகவும் உள்ளன.
- சக்தி நிறுவனங்களுக்கான விதிமுறைகளை நாம் உருவாக்குவதுடன் அவற்றைச் செயல்படுத்துகின்றோம்.
- சக்தி நிறுவனங்களுக்கு நாம் உரிமம் வழங்குகின்றோம் (உ+ம் மின்சாரப் பயன்பாடுகள், கடத்திகள், உருவாக்கிகள், மற்றும் சக்தி சில்லறை விற்பனையாளர்கள்).
- புகார்களுக்கான தீர்வை எளிதாக்குவதற்காக சக்தி நிறுவனங்களுடனும் நுகர்வோருடன் சேர்ந்து நாங்கள் பணியாற்றுகின்றோம்.
- மின்சக்தி/இயற்கை வாயு வழங்கல் மற்றும் விநியோகத்துக்காக உங்கள் பயன்பாட்டு நிறுவனம் அறவிடும் கட்டணங்களை நாங்கள் தீர்மானிக்கின்றோம்.

பின்வருவன பற்றி மேலும் அறிவதற்கு :

- சக்தி நுகர்வாளராக உங்களுடைய உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்.
- மின்சக்தி மற்றும் இயற்கை வாயுக்கு எவ்வளவு கட்டணம் செலுத்துகிறீர்கள்.
- ஒன்ராறியோவில் எப்படி, எப்போது சக்தி விலைகள் மற்றும் கட்டணங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.
- உங்களுடைய மின்சக்திப் பாவனையை நிர்வகிக்க smart meters மற்றும் பாவனை நேரத்துக்குரிய (TOU) விலைகள் உங்களுக்கு எப்படி உதவலாம்.
- உங்களுடைய சக்தி வழங்கலைத் தெரிவுசெய்தல்:

  » உங்களுடைய பயன்பாட்டு நிறுவனத்தின் மட்டுப்படுத்தப்பட்ட கட்டணம் அல்லது
  
  » சக்தி சில்லறை விற்பனையாளர் ஒருவரால் வழங்கப்பட்ட விலை

**உங்களுடைய மின்சக்திப் பாவனையை நிர்வகியுங்கள்**

உங்களுடைய மின்சக்திப் பாவனையின் சிலவற்றை மின்சக்தி விலை <u>குறைவாக</u> இருக்கும் நேரங்களுக்கு மாற்றுங்கள்.


ஒன்ராறியோவில் உள்ள வீடுகளும் சிறிய வர்த்தகங்களும் பாவனை நேரத்துக்குரிய விலைகளைச் செலுத்துகின்றன. பாவனை நேரத்துக்குரிய விலைகள் நேரத்துக்கேற்பவும் நாளுக்கேற்பவும் மாறுபடுகின்றன.

அனேகமான கைத் தொலைபேசி திட்டங்களைப் போல மின்சக்தி விலைகளும் தேவை குறைவாக உள்ள போது மலிவாக உள்ளன: மாலை நேரங்கள், வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள்

தேவை குறைவாக இருக்கும் போது: மின்சக்தியைக் குறைந்தளவான மக்கள் பாவிக்கிறார்கள், நுகர்வோர் குறைவான கட்டணம் செலுத்துகிறார்கள். இது ஏனெனில், அணு மற்றும் பாரிய நீர்மின்சாரம் போன்ற குறைந்த செலவுள்ள மூலங்களிலிருந்து அதிகளவில் உங்களுக்கு மின்சக்தி கிடைக்கின்றது.

தேவை அதிகமாக இருக்கும் போது: வேலைநாள் தொடங்கும் போது, அனேகமான மக்களும் வர்த்தகங்களும் தங்களுடைய விளக்குகள், உபகரணங்கள் மற்றும் கருவிகளை இயக்குகிறார்கள். மகாணத்துக்குரிய மலிவான மின்சக்தி முற்றாகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் அதிக விலையான மூலங்களுக்கு அது திசை திரும்புகிறது.

- மேலதிக தகவல்களுக்கு பார்வையிடுங்கள்: www.ontarioenergyboard.ca/OEB/Consumers




## மின்சக்தி அல்லது இயற்கை வாயுக்கான ஒரு ஒப்பந்தம் பற்றி ஆலோசிக்கிறீர்களா?

எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முன்னர், யோசியுங்கள், தகுந்த முடிவெடுங்கள் . இறுதி முடிவு உங்கள் கையில்.

**ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட முன்னர் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியவை**

**ஒரு ஒப்பந்தம்**:

- சில்லறை விற்பனையாளர்களால் வழங்கப்படும் சக்தி விலைகளை OEB மட்டுப்படுத்துவதில்லை.
- விலைகளை ஒப்பிடுங்கள்—உங்களுடைய பயன்பாட்டு நிறுவனம் அல்லது ஏனைய நிறுவனங்கள் வழங்கும் விலைகளை அறியுங்கள்
- ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டுமென்ற நெருக்குதலை உணராதீர்கள்.
- ஒப்பந்தம் ஒன்று சட்டரீதியான ஒரு பத்திரமாகும்— குறிப்பிட்ட நாட்களுக்குள் ஒப்பந்தத்தில் இருந்து நீங்கள் விலகிக்கொள்ளலாம், அல்லாவிடில் அந்த ஒப்பந்த விதிமுறைகளுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டியிருக்கலாம்..
- விற்பனை முகவர்கள் நிறுவன அடையாளஅட்டை அணிந்திருக்க வேண்டும்.

- ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட நீங்கள் ஒத்துக்கொள்ளாவிட்டால் உங்களுடைய கட்டணச் சீட்டை நீங்கள் காட்ட வேண்டியதில்லை.
- பயன்பாட்டு நிறுவனத்துடனான அல்லது சில்லறை விற்பனையாளருடனான பத்திரங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும் கண்காணியுங்கள்.

**ஒரு ஒப்பந்தத்தில் நீங்கள் கையொப்பமிட்ட பின்னர்:**

1. உங்களுக்கு ஒரு பிரதி கிடைக்க வேண்டும்.

2. உங்களுடைய மனதை நீங்கள் மாற்றினால் அதை ரத்துச் செய்வதற்கு 10 நாள் அவகாசம் இருக்கின்றது.

3. நீங்கள் அந்த ஒப்பந்தத்தை தொடர விரும்புகிறீர்கள் என்பதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டியிருக்கலாம். நீங்கள் உறுதிசெய்த பின்னர், அந்த ஒப்பந்தம் முடிய முன்னர் அதை நீங்கள் ரத்துச் செய்ய விரும்பினால் கட்டணம் ஒன்றை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கலாம்.

4. ஒப்பந்தங்கள் வேறுபட்ட வழிகளில் புதுப்பிக்கப்படலாம் அல்லது நீடிக்கப்படலாம் (உ+ம். எழுத்தில், தொலைபேசி மூலம், இணையத்தில் அல்லது தானாக). மேலதிக விபரங்களுக்கு உங்களுடைய சில்லறை விற்பனையாளரை அல்லது OEB ஐத் தொடர்பு கொள்ளுங்கள்.

## தகவலறிந்த சக்தி நுகர்வோராக இருப்பதற்கு, ஒன்ராறியோ சக்திச் சபை உங்களுக்கு உதவலாம்

பல்வேறு விடயங்கள் பற்றிய தகவல்களுக்குப் பார்வையிடுங்கள்: www.ontarioenergyboard.ca/OEB/Consumers

எங்களுடைய நுகர்வோர் தொடர்புகள் மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்
(திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:30 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.)

1-877-632-2727 (ஒன்ராறியோவுக்குள் கட்டணமற்றது)
416-314-2455 (ரொறன்ரோ பெரும்பாகத்துக்குள் அல்லது கனடாவுக்கு வெளியே)
consumerrelations@ontarioenergyboard.ca

எங்களைப் பின்தொடருங்கள்: @OntEnergyBoard

ஒன்ராறியோ சக்திச் சபை என்பது சுயாதீனமான, பாரபட்சமற்ற ஒரு பொது நிறுவனம் ஆகும். பொதுமக்களின் நலனுக்காக நாங்கள் முடிவெடுக்கின்றோம். ஒரு நியாயமான செலவில், நம்பகமான சக்திச் சேவைகளை உங்களுக்கு வழங்கும், பணரீதியாக சாத்தியமான வினைத்திறனான சக்தித் துறையை ஊக்குவிப்பது எங்களுடைய நோக்கம் ஆகும்.

*வேறு மொழிகளிலும் இத் தகவல் கிடைக்கின்றது. எங்களுடைய இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது எங்களுடைய நுகர்வோர் தொடர்புகள் மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.*